1982 பிப்ரவரி 6]

கோவை நகரத்தில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்கள்

*வினா எண். 80—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) கோவை நகரத்தில் ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர் போட்டு ஓட்டாமல் பிரயாணிகளிடம் அதிகக் கட்டணம் வசூலிப்பது பற்றி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஆட்டோக்கள் கண்டிப்பாக மீட்டர் போட்டு ஓட்டி கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) மீட்டர் போடாத ஆட்டோ மற்றும் டாக்சிகள் ஓடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. மேலும், பொது மக்களின் புகார்களில் குறிப்பிடப்பட்டுள்ள வாகன உரிமையாளர்கள் மறும் ஓட்டுனர்கள் மீதும் காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறை அதிகாரிகளினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, ஆட்டோரிக்ஷாக்களில் மீட்டர் போடாமல் ஓட அனுமதிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி தெளிவாக அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்வது நல்லது என்று கருது கிறேன். சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப் பினர்கள் கலெக்டர் அவர்களும் சேர்ந்து சம்பந்தப்பட்ட ஆட்டோ-ரிக்ஷா சொந்தக்காரர்களையும் தொழிலாளர்களை யும் வைத்துப் பேசி எடுத்த முடிவுப்படி மீட்டர்கள் போட்டு ஓடாமல் பிரயாணிகளுக்கும் அவர்களுக்கும் சண்டை ஏற்பட்டு ஆட்டோரிக்ஷாவிலே பயந்து கொண்டு இறங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே திட்டவட்டமாக மீட்டர்கள் போட்டு மீட்டர்களில் உள்ள காசுபடிதான் வாங்க வேண்டுமென்று திட்ட வட்டமான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை கோவையிலே மட்டுமல்ல, சென்னையிலும் தமிழகத்தின் மற்ற இடங்களிலும் இருப்பதால் நான் இந்தப் பிரச்சினையைப் பற்றி நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறேன். நான் வேதனையோடு சொல்கிறேன், நான் ஏற்கனவே இதே இடத்திலே பதில் சொல்கிறபோது சொல்லியிருக்கிறேன். அங்கே அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அத்தனை தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் ஒத்துழைப்புக் கொடுப்பார்

களானால் அதை நடைமுறைப்படுத்துவதிலே சிக்கல் இருக்காது. அதற்காக நீங்கள் நடவடிக்கை எடுத்தால் அரசாங்கம் நிம்மதியாக அதை செய்ய முடியும். தொழிற் சங்கங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்பதை மட்டும் நான் அழுத்தந் திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இந்த விஷயத்தைப் பற்றித் தொழிற்சங்கங்களின் மீது அமைச்சரவர்கள் அதன் பொறுப்பைச் சுமத்துவதில் பயன் இல்லை; அது உண்மை ஆகாது. தொழிற்சங்கத்தைப் பொறுத்த வரையில் நான் சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவன். எங்கள் தொழிற் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கும் ஆட்டோ ரிக்ஷா தொழிலாளிகள் மீட்டர் போடாவிட்டால் அவர்களைச் சங்கத்தில் வைத்து இருப்பதில்லை என்ற உத்தரவாதத்தைக் கொடுத்து இருக்கிறோம். மற்றச் சங்கங்களைப் பற்றி அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். இப்பொழுது இவர்களுக்குக் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு, தொழிலாளிகள் சாப்பிட வழியும், ஆட்டோ ரிக்ஷாவை வாடகைக்கு விடுபவர்களுக்கு வழியாகவும் இல்லை என்ற புகார் இருக்கிறது. அதைத் திருத்தி நியாயமான முறையில் கட்டணத்தைக் கொடுக்கும் முறையில், கட்டாயமாக மீட்டர் போட வேண்டுமென்று இந்த இரண்டையும் இணைத்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டையும் இணைத்து நடவடிக்கை எடுக்க இப்பொழுதே அரசு தயாராக இருக்கிறது. ஆனால் அப்படி நடவடிக்கை எடுக்கும்பொழுது கட்டணத்தை உயர்த்தி விட்டார்களே என்று வரும்போது நீங்களும் அரசாங்கத்திற்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும். நாமே பேசி நடவடிக்கை எடுக்கலாம். கட்டணத்தை எவ்வளவு உயர்த்தலாம், எப்படி இருந்தால் கட்டுப்படியாகும் என்று சொல்லுங்கள். அதற்குப் பிறகு எல்லோரும் சேர்ந்து மக்களிடத்தில் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம்.

திரு. ந. குலசேகரபாண்டியன்: தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்களும், டாக்சிகளும் மிகக் குறுகிய தூரத்திற்குக் கூப்பிட்டால் வருவதில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து ஹாஸ்டலுக்குக் கூப்பிட்டால் ஒருவரும் வரமாட்டேன் என்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்கள் குறுகிய தூரத்திற்கு வருவதில்லை என்று உறுப்பினரவர்கள் சொன்னார்கள். நான் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள் இதே கேள்வியைக்

[1982 பிப்ரவரி 6]

கேட்டபொழுது பதில் சொன்னேன். யார் அவ்வாறு செய்தார்கள் என்று, குறைந்தபட்சம் சட்டமன்ற உறுப்பினர்களாவது சொன்னால் நாங்கள் நடவடிக்கை எடுப்பதன் மூலம் மற்றவர்களும் பயப்படுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை.

(அ) ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது மற்ற அறிவிப்புகளையும் எடுத்துக் கொள்வது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் 25—1—1982 ஆம் தேதியன்று 54-வது விதியின் கீழ் ஒரு நோட்டீஸ் கொடுத்திருந்தேன். ஆளுநர் ஆற்ற இருக்கின்ற உரையின் மேலே அதைப்பற்றி பேசுவதற்கான வாய்ப்பிருக்கிறது என்று 30—1—82 ஆம் தேதியன்றே ரிஜெக்ட் செய்திருக்கிறீர்கள். ஆளுநர் உரை 1—2—1982 ஆம் தேதியன்று நிகழ்த்தப்பட்டிருக்கிறது. எனவே, ஆளுநர் உரையில் என்ன சங்கதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று தெரிவதற்கு முன்னாலேயே இதை ரிஜெக்ட் செய்திருக்கிறீர்கள். ஆளுநர் உரையின்மீது பேசிய ஒரு உறுப்பினருக்கு இன்றைய தினம் 54-வது விதியின் கீழ், ஒரு இஷ்யூவை ரெய்ஸ் பண்ணுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். அதே இஷ்யூவை நான் ரெய்ஸ் செய்யும் நேரத்தில் அது ரிஜெக்ட் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த இஷ்யூ என்று சொன்னால் அதைப் பார்ப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, ஆளுநர் உரைமீது விவாதம் நடந்து கொண்டிருப்பதால் அட்ஜார்ன்மெண்ட் மோஷனையோ, கால் அட்டென்ஷனையோ எடுப்பதற்கில்லை என்று சொல்லப்படுகிறது. நான் 9 அட்ஜார்ன்மெண்ட் மோஷன்களைக் கொடுத்திருக்கிறேன். அதிலே ஒன்றுகூட எடுக்கப்படவில்லை. ஆனால் இரண்டு கால் அட்டென்ஷன்கள் வந்து இருக்கின்றன. கால் அட்டென்ஷனை விட அட்ஜார்ன்மெண்ட் மோஷன்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதை எடுக்கவில்லை. அதை எடுப்பீர்களா மாட்டீர்களா ?